# திராவிட மாடல் அரசு 30

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.







## விளையாட்டு களம் நமதே!

இந்தியாவிலேயே நம்பர்-1 கல்வியாளர்களை, நம்பர்-1 மருத்துவர்களை, நம்பர்- 1 விஞ்ஞானிகளை, நம்பர்-1 வழக்கறிஞர்களை, தமிழ்நாடு உருவாக்கி யுள்ளது. இன்றும் உருவாக்கி வருகிறது.

இந்த வரிசையில் நம்பர்-1 விளையாட்டு வீரர்களை உருவாக்கவேண்டும் என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுக்கெனத் தனித்துறையை 2006-ஆம் ஆண்டு உருவாக்கினார். அதற்கு முன்பு வரை அது கல்வித்துறையின் கீழ் இருந்தது.

விளையாட்டுத் துறையில் ஆண்டுதோறும் ‘முதலமைச்சர் கோப்பை’ என்ற பெயரில் மாவட்ட, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நமது கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’ ஆட்சிக்கு வரும்வரை 21 வயதுக்குட்பட்டோர் மட்டும் 10 விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் போட்டிகள் நடைபெற்று வந்தன. ஆனால் முதன்முறையாக 2022-2023-ஆம் ஆண்டுக்கான முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் பள்ளி, கல்லூரி, பொதுப் பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் என ஐந்து பிரிவுகளுக்கு நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

மேலும் 10 விளையாட்டு போட்டிகளுடன் சிலம்பம், கபடி, கிரிக்கெட், சதுரங்கம், பீச்வாலிபால் ஆகிய ஐந்து விளையாட்டுகள் சேர்க்கப்பட்டு 15 விதமான விளையாட்டுகளுக்கும் போட்டிகள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளான சிலம்பம், கபடி ஆகியவையும் இடம்பெற்றிருந்தது கூடுதல் சிறப்பு.

### பிரமாண்டமான விளையாட்டுப் போட்டி

இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் ‘முதலமைச்சர் கோப்பை’ என்ற பெயரில் 12 வயது முதல் முதியவர்கள் வரை கலந்துகொள்ளும் மாவட்ட, மண்டல, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள், நடந்ததில்லை. விளையாட்டுக்கு தமிழ்நாடு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதற்கு ஒரு சோற்றுப் பதம் இது.

இந்த ஆண்டுக்கான போட்டி குறித்த அறிவிப்பை 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நிறைவு விழாவின் போது நமது முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டார்கள். தொடர்ந்து இந்தப் போட்டிகளைச் சிறப்பாக நடத்திட, மாவட்ட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

பிறகு அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட அளவிலான மற்றும் மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள், பிப்ரவரி முதல் மார்ச் மாதம் வரை நடைபெற்றன. தொடர்ந்து ஜூலை மாதத்தில் மாநில அளவிலான போட்டிகள் நடைபெற்றன.

> ➢ **50** கோடியே **86** லட்சம் ரூபாய்-இந்தப் போட்டிகளை நடத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை.
>
> ➢ **3** லட்சத்து **70** ஆயிரம் வீரர்கள் - மாவட்ட, மண்டல அளவில் நடைபெற்ற போட்டிகளில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை.
>
> ➢ **27** ஆயிரத்து **411** வீரர்கள் - மாநில அளவில் பங்கேற்றவர்களின் எண்ணிக்கை.
>
> ➢ **5** புதிய விளையாட்டுகள் - சிலம்பம், கபடி, கிரிக்கெட், சதுரங்கம், பீச் வாலிபால் ஆகியவை இந்த ஆண்டுப் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

### அனைவரையும் உள்ளடக்கிய போட்டிகள்

விளையாட்டு என்பது இந்த வயதினருக்கு, இவர்கள் மட்டும்தான் விளையாட வேண்டும் என்பது கிடையாது. எப்படிக் கல்வியை யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பயிலலாமோ, அதைப் போலவே விளையாட்டையும் யார் எப்போது வேண்டுமானாலும் விளையாடலாம். அதனால்தான் மாணவர்கள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள், மாற்றுத் திறனாளிகள் என அனைவரையும் உள்ளடக்கி நடத்தப்பட்டன.

அதே போல், விளையாட்டுத் துறையில் புதிய திறமையாளர்களை அடையாளம் காண ஒரு வாய்ப்பாக இந்தப் போட்டிகள் இந்த ஆண்டு முதல் மாறியிருப்பது வரவேற்புக்குரிய முயற்சி ஆகும். அதனால்தான் மாநிலத்தில் உள்ள 12 ஆயிரம் ஊராட்சிகளிலிருந்தும் வீரர் வீராங்கனையர் இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டுள்ளனர் என்றால் அது மிகையல்ல.

### தரமான ஏற்பாடுகள்

இந்தப் போட்டிகளுக்கான அறிவிப்பு வந்தது முதலே அவற்றைச் சிறப்பாக நடத்தி முடிக்க வேண்டிய ஏற்பாடுகள் உலகத் தரத்தில் மேற்கொள்ளப்பட்டன. ‘களம் நமதே’ என்று இந்தப் போட்டிகளை விளம்பரப்படுத்தி, போட்டிக்கான ‘வீரன்’ இலச்சினையும் பாடலும் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டன.

மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளின் போது 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர் வீராங்கனையர், பயிற்றுநர்கள், நடுவர்கள், அலுவலர்கள் உட்பட அனைவருக்கும் போட்டி நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும் தங்குவதற்கு வசதியாகத் தனியார் விடுதிகள் மற்றும் அரசு விருந்தினர் மாளிகை ஆகியவற்றில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அறைகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

மேலும் போட்டி நடைபெற்ற அனைத்து நாட்களிலும் மூன்று வேளை உணவும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டன. வீரர்கள் தங்கள் விடுதிகளில் இருந்து மைதானத்துக்கு வந்து செல்ல பேருந்து வசதிகள் செய்யப்பட்டன. தவிர, வீரர்களின் பாதுகாப்புக்காக, காவல் துறையும், மருத்துவத் துறையும் கைகோத்து நின்றன.

விளையாட்டுக்கு எனத் தனி அமைச்சகத்தை உருவாக்கினார் முத்தமிழறிஞர் கலைஞர். அவரிடமிருந்த ‘ஸ்போர்ட்ஸ்மேன்ஷிப்’ இன்றைய நமது முதலமைச்சரிடமும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரிடமும் வந்து சேர்ந்திருக்கிறது. திராவிட மாடல் அரசு, சிகரம் தொடும் பல புதிய வீரர் வீராங்கனையரை உருவாக்கும் என்பது நிச்சயம்.

> தமிழ்நாடு முழுவதிலும் இருந்து 12 வயது முதல் 19 வயது வரை உள்ள பள்ளி மாணாக்கர்களும், 17 வயது முதல் 25 வயது வரையிலான கல்லூரி மாணாக்கர்களும், 15 வயது முதல் 35 வயது வரையிலான பொதுப் பிரிவினரும், அனைத்து வயது மாற்றுத்திறனாளிகளும், தமிழ்நாடு அரசு ஊழியர்களும் மற்றும் தமிழ்நாட்டில் பணிபுரியும் ஒன்றிய அரசு ஊழியர்களும் இந்தப் போட்டிகளில் கலந்துகொண்டனர்.

...சாதனை தொடரும்

## அறத்தில் நிற்கும் ‘தி டெலகிராப்’


The ‘record-breaking’ blah-sphemy

இந்தியா முழுவதும் ஊடகங்களைப் பணிய வைத்து, தனது ஊது குழலாக மாற்றியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு. எனினும், சில நேரங்களில் மக்களின் மனநிலையையும் ஊடகங்கள் பிரதிபலித்தே ஆகவேண்டும் என்பதை ‘தி டெலகிராப்’ இதழின் செய்திகள் சொல்கின்றன. மணிப்பூர் கலவரத்தில் மரண எண்ணிக்கையும், பாதிக்கப்பட்டவர்களின் கண்ணீரும் வலியும் ஓலமும் எழுந்து, இந்தியாவையே நிலைகுலைய வைத்த நிலையில், அரசியல் அழுத்தங்களுக்குப் பின், 77 நாட்களுக்குப் பின்னர் பிரதமர் அது குறித்து வாய் திறந்தார். 78-வது நாள் முதலைக் கண்ணீர்(நீலிக்கண்ணீர்) வடிப்பதாகத் ‘தி டெலகிராப்’ முதல் பக்கத்தில் செய்தி வெளியிட்டது. மணிப்பூர் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் எனப் பல எதிர்க்கட்சிகள் கொடுத்த அழுத்தங்களுக்குப் பின்னர், அவையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லா தீர்மானத்துக்குப் பதில் அளித்த மோடி, மணிப்பூர் குறித்துப் பேசாமல், வேறு வகைகளில் விவாதத்தைத் திசை திருப்பினார். அது குறித்து “வெறும் வாய் சவடால்” என்பதாக அந்த நாளிதழ் பதிவு செய்தது. போலிகளை அம்பலப்படுத்துவதில் சொற்களற்ற முறையில் ஒரு வடிவத்தைக் கையில் எடுத்துள்ளது ‘தி டெலகிராப்’. அந்த அறம் நீடிக்கட்டும்.

## :ப்ளாஷ்பேக்



### தளபதி தலைமையில்...


பழனிச்சாமி

1990-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 26-ஆம் நாள் எனக்கு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அப்போது, நான் இளைஞர் அணியில் நகரத் துணை அமைப்பாளராகப் பொறுப்பு வகித்தேன். எனது திருமணத்தை, அன்றைய கழக இளைஞர் அணி செயலாளர், இன்றைய நம் தலைவர் அவர்கள் தலைமையேற்று சிறப்புற நடத்தி வைத்தார்கள். பேரறிஞர் அண்ணா பற்றிய நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லி வாழ்த்துரை வழங்கினார். அப்போது எடுத்த படம் இது.

**-ப.க.பழனிச்சாமி, மாவட்டக் கழகப் பொருளாளர், ஈரோடு தெற்கு மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### வரவேற்பும் - சமாளிப்பும்

**1952-ஆம் ஆண்டு, கலைஞர் திரைக்கதை, வசனம் எழுதிய ‘பராசக்தி’ படத்தில்தான், சினிமாவில் ‘திராவிட நாடு’ என்கிற சொல் முதன்முதலில் இடம் பெற்றது. படம் வெளியான அன்று, ஒரு தியேட்டருக்குக் குடும்பத்துடன் படம் பார்க்கச் சென்றார் கலைஞர். அவர் இருப்பதை அறிந்து, படம் முடியும் நேரத்தில், தியேட்டருக்கு வெளியே கட்டுக்கடங்காத பெருங்கூட்டம் கூடிவிட்டது. அப்போது கலைஞர் போலவே இருந்த வீனஸ் கோவிந்தராஜன் என்கிற தயாரிப்பாளரை முன்பக்கமாக அனுப்பிவிட்டு, பின்பக்கமாக காரில் ஏறிச் சென்றார் கலைஞர். வசன கர்த்தாக்களில் கலைஞருக்கு கிடைத்த வரவேற்பு போல வேறு யாருக்கும் கிடைக்கவில்லை.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 209




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.